தொல்காப்பிய மன்றம் - கனடா
Association for Tolkappiyam - Canada
தொல்காப்பிய வழி, தொன்மைத் தமிழர் வரலாறும் பண்பாடும் அறிவோம்

2ஆவது உலகத் தொல்காப்பிய ஆராய்ச்சி மாநாடு - 2026
மாணவர்களுக்கான தமிழ்த்திறன் போட்டிகள்

**பேச்சுப் போட்டி: வகுப்பு - முதுமழலை (SK) (2020-இல் பிறந்தோர்)**

## நாம் தமிழர்!

நாம் தமிழர். எமது தாய் மொழி தமிழ். தமிழ் மொழி எமது அடையாளம். உலகில் வாழும் தொன்மையான மொழிகளுள் தமிழும் ஒன்று. தமிழ் ஒரு செம்மொழியாகும்.

இன்று, உலகின் பல நாடுகளிலும் தமிழர் வாழ்கிறார்கள். தமிழர் பெருமை உலகெங்கும் பேசப்படுகிறது.

“தமிழன் என்றோர் இனமுண்டு,
தனியே அவர்க்கொரு குணமுண்டு;
அமிழ்தம் அவனுடை மொழியாகும்,
அன்பே அவனுடை வழியாகும்."

என்று அழகான நான்கு வரிகளில் தமிழரின் பெருமையைச் சிறப்பாகக் கூறியுள்ளார் நாமக்கல் கவிஞர்.

தமிழில் எழுதப்பட்ட சிறந்த இலக்கியங்களுள் உலகப் பொதுமறையான திருக்குறளும் ஒன்றாகும்.

தமிழர் தமக்கெனத் தனித்துவமான பண்பாட்டைக் கொண்டவர்கள்.

நாம் கனடாவில் வசிக்கிறோம். ஆங்கிலத்தில் கல்வி கற்கிறோம். தமிழை இரண்டாவது மொழியாகப் பாடசாலையிலும் வீட்டிலும் கற்கிறோம்.

நாம் எமது அடையாளத்தைப் பேணுவதற்குத் தாய் மொழிக் கல்வி அவசியம் என்பதை நாம் உணரவேண்டும்.

தமிழ் எங்கள் வீட்டு மொழி. நாம் எமது உறவினர்களுடனும் நண்பர்களுடனும் தமிழில் பேசி உறவாடுவோம். தமிழ் பேசத் தெரிந்த தமிழராக வாழ்வோம்.

வாழ்க தமிழ்!
நன்றி, வணக்கம்.

## பேச்சுப்போட்டிக்கான மதிப்பீட்டு முறைமை

| மதிப்பீடு | புள்ளிகள் |
|---|---|
| மனனம் | 50 |
| உச்சரிப்பு | 20 |
| பொருள் தெளிவு | 10 |
| வெளிப்பாடு | 10 |
| மேடை ஆளுமை | 10 |
| **மொத்தம்** | **100** |